பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

13 03 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. இந்தியா — மொரீஷியஸ் இடையே பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுவார்த்தை குடியரசுத் தலைவர் திருமதி திரெளபதி முர்மு முன்னிலையில் இன்று நடைபெறவுள்ளது.

2. இந்தியா - இங்கிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை விரைந்து இறுதி செய்ய வேண்டுமென பிரதமர் திரு நரேந்திரமோடி, திரு ரிஷி சுனக்கிடம் வலியுறுத்தியுள்ளார்.

3. நாட்டின் இரண்டாவது மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு உடான் திட்டத்தின் மூலம் விமான சேவைகள் வழங்கப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

4. இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களில் முதலீடு செய்ய முன்வர வேண்டுமென்று இந்திய நிறுவனங்களை அந்நாட்டு அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

5. மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரு அணி மும்பை அணியை ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

---- ***<u>இனி விரிவான செய்திகள்</u>*** ---

**[]<<<>>>[]**

இந்தியா — மொரீஷியஸ் இடையே பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுவார்த்தை இன்று நடைபெறவுள்ளது.

அரசு முறைப் பயணமாக மொரீஷியஸ் சென்றுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அந்நாட்டு பிரதமர் திரு பிரவின்குமார் ஜக்நாத் ஆகியோர் முன்னிலையில் இந்த பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

அப்போது பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்படுவதுடன், காணொலி வாயிலாக பல திட்டங்களும் தொடங்கி வைக்கப்படவுள்ளன.

தமது இந்த பயணத்தின்போது மொரீஷியஸில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க இடங்களையும் திருமதி திரௌபதி முர்மு பார்வையிட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி, இங்கிலாந்து பிரதமர் திரு ரிஷி சுனக்குடன் நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

இது குறித்து தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், இரு நாடுகளுக்கும் பலனளிக்கக்கூடிய தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை விரைந்து நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டுதாகக் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்துவது என இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும் திரு நரேந்திரமோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தேசிய கூட்டுறவு ஏற்றுமதி நிறுவனம், கூட்டுறவு இயற்கை நிறுவனம் உள்ளிட்ட கூட்டுறவுத்துறையின் புதிய கட்டிடங்களை அத்துறைக்கான அமைச்சர் திரு அமித்ஷா இன்று திறந்து வைக்கிறார்.

புதுதில்லியில் உள்ள உலக வர்த்தக மையத்தில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் இயற்கை உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதிக்கான வழிமுறைகளையும் திரு அமித்ஷா வெளியிட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கூட்டுறவுத் துறை மூலம் பாரம்பரிய விதை ஆராய்ச்சி மற்றும் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கு புதிய கட்டிடங்கள் உதவிகரமாக இருக்கும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

நாட்டின் இரண்டாவது மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு உடான் திட்டத்தின் மூலம் விமான சேவைகள் வழங்கப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

கோவா மாநிலம் மனோகர் விமான நிலையத்திலிருந்து லட்சத்தீவு **Agatti** தீவுகளுக்கு முதலாவது விமான சேவையை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

உள்நாட்டு விமான போக்குவரத்து சேவை கடந்த 2014-ஆம் ஆண்டு ஆறு கோடியாக இருந்த நிலையில், வரும் 2030-ஆம் ஆண்டிற்குள் 30 கோடியாக அதிகரிக்கும் என்று அவர் கூறினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் விமான போக்குவரத்துத் துறைக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக மண்டல அளவில் ஆறு புதிய விமான நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளதாக திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், பெலாரஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு செர்ஜி அலினிக்-யை புதுதில்லியில் நேற்று சந்தித்து பேச்சு நடத்தினார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு ஜெய்சங்கர், இரு நாடுகளுக்கும் இடையே அரசியல், வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகள் குறித்த தற்போதைய சூழல் பற்றி விவாதித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு, அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து பெலாரஸ் அமைச்சருடன் கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மற்றும் ஐ நா சபையில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவது தொடர்பாகவும், மண்டல அளவிலான பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசனை நடத்தியதாகவும் திரு ஜெய்சங்கர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே நியுசிலாந்து துணை பிரதமரும், வெளியுறவுத்துறை அமைச்சருமான திரு வின்ஸ்டன் பீட்டர்ஸையும் திரு ஜெய்சங்கர் நேற்று புதுதில்லியில் சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

அப்போது பொருளாதாரம், பாதுகாப்பு, கல்வி உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்பட ஒப்புக் கொள்ளப்பட்டதாக திரு ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள மற்றொரு பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

தேர்தல் பத்திரங்கள் தொடர்பான அனைத்து விவரங்களையும் பாரத ஸ்டேட் வங்கி, தேர்தல் ஆணையத்திடம் நேற்று சமர்ப்பித்துள்ளது.

பாரத ஸ்டேட் வங்கிக்கு உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை அடுத்து இந்த விவரங்களை அளித்திருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் பத்திரங்கள் தொடர்பான விவரங்களை வெளியிடுவதற்கு வரும் ஜூன் மாதம் 30-ஆம் தேதி வரை கால அவகாசம் கோரி எஸ் பி ஐ தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்ததுடன், நேற்று மாலைக்குள் அனைத்து விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேர்தல் பத்திர விவரங்கள் இம்மாதம் 15-ஆம் தேதிக்குள் தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டுமென்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

[]<<<>>>[]

தேர்தல் பத்திரங்கள் தொடர்பான அனைத்து விவரங்களையும் பாரத ஸ்டேட் வங்கி, தேர்தல் ஆணையத்திடம் நேற்று சமர்ப்பித்துள்ளது.

பாரத ஸ்டேட் வங்கிக்கு உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை அடுத்து இந்த விவரங்களை அளித்திருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் பத்திரங்கள் தொடர்பான விவரங்களை வெளியிடுவதற்கு வரும் ஜூன் மாதம் 30-ஆம் தேதி வரை கால அவகாசம் கோரி எஸ் பி ஐ தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்ததுடன், நேற்று மாலைக்குள் அனைத்து விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேர்தல் பத்திர விவரங்கள் இம்மாதம் 15-ஆம் தேதிக்குள் தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டுமென்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

**[]<<<>>>[]**

குடியுரிமை திருத்தச் சட்டம் எந்த ஒரு சமுதாயத்துக்கும் எதிரானது அல்ல என்று பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சில அரசியல் கட்சிகள் வேண்டுமென்றே அதுபோன்ற பிரச்சாரத்தை பரப்பி வருவதாக குற்றம்சாட்டினார்.

நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் குடியுரிமை வழங்கும் நோக்கிலேயே இந்த சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதாக திரு அண்ணாமலை தெரிவித்தார்.

முன்னதாக சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் திரு சரத்குமார், பிஜேபி மாநில தேர்தல் பொறுப்பாளர் திரு அரவிந்த் மேனன் மற்றும் திரு அண்ணாமலை முன்னிலையில் தமது கட்சியை பிஜேபி-யுடன் இணைத்தார்.

சமத்துவ மக்கள் கட்சியை பிஜேபி-யுடன் இணைத்ததற்கும், தேசிய அரசியலில் திரு சரத்குமார் இணைந்துள்ளதையும் தாம் வரவேற்பதாக திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

2023-ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதுகள் புதுதில்லியில் நேற்று வழங்கப்பட்டன.

24 மொழிகளில் தேர்வு செய்யப்பட்ட படைப்புகளின் எழுத்தாளர்களுக்கு வழங்கப்பட்ட இந்த விருது ஒரு லட்சம் ரூபாய் ரொக்கமும், பட்டயமும் அடங்கும்.

சாகித்ய அகாடமி தலைவர் திரு மாதவ் கௌசிக், ஒடியா மொழி எழுத்தாளர் பிரதிபா ராய் உள்ளிட்டோர் பங்கேற்று விருதுகளை வழங்கினர்.

**[]<<<>>>[]**

பாகிஸ்தானிலிருந்து படகில் கடத்தி வரப்பட்ட 480 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருளை இந்திய கடலோர காவல்படையினர் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.

போர்பந்தர் பகுதியிலிருந்து 150 கிலோமீட்டர் தொலைவில் அரபிக்கடலில் வந்த படகை கடலோர காவல்படையினர் சோதனையிட்டபோது அவை பறிமுதல் செய்யப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சக செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

இலங்கையில் அதிக அளவில் உள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களில் இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்ய முன்வர வேண்டுமென்று அந்நாட்டு எரிசக்தித்துறை அமைச்சர் காஞ்சனா **Wijesekara** கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியாவின் எரிசக்தித்துறை தொடர்பான குழுவினர் கொழும்புவில் பங்கேற்ற கருத்தரங்கு நிகழ்ச்சியில் அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

எரிசக்தி துறை தொடர்பான அதிக ஆதாரங்கள் இலங்கையில் இருப்பதாகவும், இரு நாடுகளும் இணைந்து இந்த துறையில் புதிய வளர்ச்சியை எட்ட முடியும் என்றும் விஜேசேகரா நம்பிக்கை தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரு அணி மும்பை அணியை ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

தில்லியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடி மும்பை அணி 19 ஓவரில் 113 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

பின்னர் ஆடிய பெங்களூரு அணி மூன்று விக்கெட்களை மட்டுமே இழந்து 115 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி அணியும் - குஜராத் அணியும் மோதுகின்றன.

இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்கும்

**[]<<<>>>[]**

**Orleans** மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அர்ஜூன் - துருவ்கபிலா இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

பிரான்ஸில் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை சீன தைபேயின் **Ming che lu – Tang Kai** இணையை 21-13,

21-12 என்ற செட் கணக்கில் வீழ்த்தியது.

மற்றொரு இந்திய இணையான கிருஷ்ண பிரஷாத் - சாய் ப்ரத்திக் இணை பல்கேரியாவின் இவான் ரூசேவ் - லியான் ஸ்டாய்னோவ் இணையை 21-10, 21-18 என்ற செட்களில் வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் பிரியா - ஸ்ருதி மிஸ்ரா இணையும் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**[]<<<>>>[]**

ஆல் இங்கிலாந்து பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி வி சிந்து, காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இன்று கொரியாவின் **An se young** -ஐ எதிர்கொள்கிறார்.

பிர்மிங்காமில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில்முதல் செட்டை 21-10 என்ற கணக்கில் வென்ற பி வி சிந்து, எதிர்த்து விளையாடிய ஜெர்மனியின் லீ காயம் காரணமாக வெளியேறியதால் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சிராக் ஷெட்டி – சாத்விக் சாய்ராஜ் இணை இன்று பங்கேற்கிறது.

லக்ஷயா சென், பிரியான்ஷூ ரஜாவத் ஆகியோர் ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் பங்கேற்கவுள்ளனர்.

நேற்று நடைபெற்ற ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில் எச் எஸ் பிரணாய், கிடாம்பி ஸ்ரீகாந்த், ஆகர்ஷி காஸியப் ஆகியோர் தோல்வியடைந்தனர்.

***End of News***